# புவியியல்

## 10 ஆந் தரம்

பாடத்திட்டம்

(2007 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்துவதற்கானது)

சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானுடவியல், சமூகவியற் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
2007

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## ஆலோசனை

| | | |
|---|---|---|
| பேராசிரியர் ஜே.டபிள்யூ.விக்ரமசிங்ஹ | பணிப்பாளர் நாயகம் | - தே.க.நி |
| பேராசிரியர் எம்.எச். கருணாநாயக்க | ஸ்ரீஜயவர்த்தன புர பல்கலைக்கழகம் | |
| பேராசிரியர் என்.கே தங்கல்ல | களனி பல்கலைக்கழகம் | |
| பேராசிரியர் வீ. நந்தகுமார் | பேராதனைப் பல்கலைக்கழகம் | |
| கலாநிதி ஏ.எஸ்.எம் நவ்பல் | பேராதனைப் பல்கலைக்கழகம் | |
| கலாநிதி ஜே.எம். சமரகோன் பண்டா | இராஜரட்டைப் பல்கலைக்கழகம் | |
| திரு. விமல் சியம்பளாகொட | உதவிப் பணிப்பாளர் நாயகம்<br>மொழிகள், மானுடவியல், சமூகவியல் பீடம் | - தே.க.நி |
| கலாநிதி லலிதா பட்டுவிடகே | பணிப்பாளர், சமூகவியல் துறை | - தே.க.நி |
| திருமதி எம்.பி. ரஞ்சனி தனவர்த்தன<br>- சமூகவியல் துறை | செயற்றிட்ட அதிகாரி<br>- தே.க.நி | |

## செயற்றிட்டக் குழு

| | | |
|---|---|---|
| திருமதி எம்.பி. ரஞ்சனி தனவர்த்தன | - செயற்றிட்டத்தலைவி | - தே.க.நி |
| திரு எப்.எம் நவாஸ்தீன் | - செயற்றிட்ட அதிகாரி | - தே.க.நி |
| திரு எம்.கே. கிங்ஸ்லி பிரியந்த | - செயற்றிட்ட அதிகாரி | - தே.க.நி |
| செல்வி கே.ஏ.எல். கீதானி | - உதவிச் செயற்றிட்ட அதிகாரி | - தே.க.நி |

## எழுத்தாளர் குழு

| | |
|---|---|
| திரு ஆர்.பி. பீரிஸ் | - ஓய்வு பெற்ற பரீட்சை ஆணையாளர்<br>பரீட்சைத் திணைக்களம் |
| திரு எஸ்.எம் தயானந்த | - ஓய்வு பெற்ற செயற்றிட்ட அதிகாரி<br>தேசிய கல்வி நிறுவகம் |
| திரு எச். வீரரத்ன | - ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் - சமூகக்கல்வி |
| திரு எச்.எம்.எச் தயானந்த | - ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் - சமூகக்கல்வி |
| திருமதி ஈ.எம். சீலாவத்தீ மெனிகே | - ஆசிரிய ஆலோசகர்<br>கோட்டகல்வி அலுவலகம், குளியாப்பிட்டி |
| திரு எஸ்.ஈ. ஜயவீர | - ஆசிரிய ஆலோசகர்<br>வலயக் கல்வி அலுவலகம், தங்கல்லை |
| திரு எஸ்.ஏ.எச். விஜயசேகர | - ஆசிரியர் சேவை<br>ஆனந்த மகாவித்தியாலயம், கொட்டாவை |
| திருமதி எஸ்.ஏ.எச் ஹுஸ்னா | - ஆசிரியர் சேவை II<br>கே/பாபுல் ஹஸன் ம.வித்தியாலயம், வரக்காப்பொல |
| திருமதி. டபிள்யூ. வல்பிட்டகே | - ஆசிரியர் சேவை<br>மில்லாவை மகா வித்தியாலயம், மில்லாவை |

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 1.1 பாடத்திட்ட அறிமுகம்

“சமூகக் கல்வியும் வரலாறும்” எனும் பாடம் ஒன்றிணைக்கப்பட்ட பாடமாகக் கற்பிக்கப்பட்டதனால் வரலாறு, புவியியல், குடியியல் தொடர்பான அறிவு, திறன், மனப்பாங்குகள் மாணவர்களிடம் தாழ் மட்டத்திலேயே காணப்பட்டமையும் மாணவர்கள் பெற்ற அறிவானது பிரயோக ரீதியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதும் பல்வேறு ஆய்வுகள் மூலமும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே இத்தகைய குறைபாடுகளை நிவிர்த்திப்பதற்கான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலிருந்தும் வலியுறுத்தப்பட்டது. இதன் காரணமாக 2005ம் ஆண்டு தொடக்கம் சமூகக் கல்வியும் வரலாறும் எனும் பாடத்திற்கு பதிலாக வரலாறு, புவியியல், குடியுரிமைக்கல்வி என்பவற்றுள் கட்டாயப் பாடங்களாக அறிமுகஞ் செய்வதற்குமாகத் தரம் 7 இல் இருந்து கற்பிக்கப்படுகின்றது.

இலங்கைப் பாடசாலைக் கலைத்திட்டத்தை மறுசீரமைப்புக்கு உட்படுத்தவும் தேர்ச்சி மட்டக்கல்வியினை சகல பாடசாலை மாணவ மாணவிகளுக்கு வழங்கவும் தேவையேற்பட்டதனால் 2007ம் ஆண்டிலிருந்து புவியியல் எனும் பாடம் தரம் 6 இல் இருந்தே பாடசாலைக் கலைத்திட்டத்தில் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 2007ம் ஆண்டிலிருந்து தரம் 10 இலும் புவியியல் எனும் பாடம் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

புவியியல் எனும் பாடத்தின் மூலம் இடம், பிரதேசம் மற்றும் பூகோளம் என்ற பரிமாணங்களின் இயற்கை அம்சங்களையும் சமூகத்தில் உள்ள தொடர்புகள், அவற்றின் போக்குகள், செயன்முறைகள் என்பவற்றை வெளி ரீதியாகவும் கால ரீதியாகவும் கற்கவேண்டியுள்ளது. அத்துடன் இப்பாடத்திட்டமானது புவியியல் பாடத்தினைக் கற்கும் மாணவர்கள் தாம் வாழும் உலகின் பல்வகைத்தன்மைகளை விளங்கிக் கொள்வதற்கு முடியுமாவதுடன் ஒருவரோடொருவரும் அதே போல் சுற்றாடலுடனும் நல்லிணக்கத்துடன் வாழ வேண்டிய அவசியம் பற்றி விளங்கிக் கொள்வதற்கும் துணை புரிகின்றது.

இதன்படி தரம் 10 பாடத்திட்டத்தினைக் கற்பதனூடாக மாணவர்களுக்கு இலங்கையின் அமைவிடம், தமது வீடு மற்றும் அயற் சூழலின் புவியியல் அம்சங்களை அறிந்து கொள்வதற்கும் வீட்டுச் சூழலினைப் பேணுவதற்குமான திறனைப் பெற்றுக் கொடுக்கின்றது. இப்பாடத்திட்டத்தில் வகுப்பறைக் கற்றல் கற்பித்தலில் அதிகமான பாடவேளைகளை பிரயோக ரீதியான கற்றலில் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் பிள்ளைகளின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பன சம அளவில் வளர்ச்சி பெறும் வகையில் கற்றல் கற்பித்தல் சூழலினை வகுப்பறையினுள் ஏற்படுத்த முடியுமாகின்றது. இதன் மூலம் மாணவரிடம் தேர்ச்சிகளை விருத்தி செய்ய முடியுமாகின்றது.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## பாடக்குறிக்கோள்

புவியியல் என்பது இட, பிராந்திய, உலகளாவிய பரிமாணங்களில், இயற்கைக்கும் சமூகத்திற்கும் இடையிலான இடைத் தொடர்புகளையும் அவற்றின் கோணங்களையும் செயன்முறைகளையும் வெளி மற்றும் கால ரீதியில் ஆராயம் விடயப் பரப்பாகும். இக்கலைத்திட்டமானது நாம் வாழும் உலகின் பல்லினத்தன்மையை விளங்கிக் கொள்வதற்கு மாணவர்களுக்கு உதவுகின்றது. டமேலும் ஏனையோருடனும் சுற்றாடலுடனும் நல்லிணக்கத்துடன் வாழ வேண்டியதன் அவசியத்தையும் அவர்களுக்கு உணர்த்துகின்றது.

கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் நடத்த தக்க விதம் ஐந்தாம் பகுதியில் வழங்கப்பட்டுள்ளது. முதலாந் தவணைக்காக கற்றல் - கற்பித்தற் செயன்முறையை நீடிப்பிற்குரிய கருவியொன்றும் தரப்பட்டுள்ளது. அது தனியாட் செயற்பாடாக முன்வைப்பதற்குரியது. அதற்கமைய முதலாந் தவணையில் மாணவரைக் கணிப்பிடுவதற்கும் மதிப்பிடுவதற்கும் உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது.

## 2.0 பாடப் பொதுத் தேர்ச்சிகள்

1.0 வாழும் சுற்றாடலின் தன்மையையும் செயன்முறைகளையும் பரிசீலிக்க கற்பார்

2.0 பௌதிக, மானிட நிலத்தோற்றத்தின் கூறுகள், பண்புகள், செயன்முறைகள் பற்றிக் கற்பார்

3.0 பௌதிக, மானிட செயற்பாடுகளின் இடைத்தொடர்புகளால் எவ்வாறு பௌதிக மானிட சுற்றாடல் பாதிக்கப்படுகின்றது என்பதைப் பரிசீலனை செய்வார்

4.0 பௌதிக, மானிட நிலத்தோற்றத்தை விளங்கிக் கொள்ள உதவுகின்ற பௌதிக மானிடப் புவியியல் அடிப்படை எண்ணக்கருக்கள், முறைகள் பற்றிக் கற்பார்

5.0 பௌதிக, மானிட நிலத்தோற்றங்களை விளங்கிக் கொள்வதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் வியாக்கியானம் செய்வதற்கும் முழுமை அணுகுமுறையைத் தேர்ந்தெடுப்பார்

6.0 பௌதிக, மானிட நிலத்தோற்றங்களை காப்பதற்கும் பேணுவதற்கும் உதவுகின்ற சாதகமான மனப்பாங்குகளை விருத்தி செய்து கொள்வார்

7.0 தரவுகளையும் தகவல்களையும் பகுப்பாய்வு செய்வதற்கும் வியாக்கியானம் செய்வதற் கும் முன்வைப்பதற்கும் புவியியல் முறை நுட்பங்களைப் பயன்படுத்துவார்

8.0 வாழ்க்கையில் அறைகூவல் மிக்க சந்தர்ப்பங்களை எதிர்கொள்ள உதவுகின்றசிறப்பான பிழைத்து வாழும் திறன்களை விருத்தி செய்து கொள்வார்

9.0 இயற்கைக்கும் சமூகத்துக்குமிடையில் நல்லிணக்கப்பாட்டினை விருத்தி செய்வதற்காக, அதில் வாழ்வோர் என்பன பற்றிய நன்கு கவனஞ் செலுத்த வேண்டியதன் அவசியத் தைப் புரிந்து கொள்வார்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 2.1 10 ஆந் தரத்திற்கான தேர்ச்சி மட்டங்கள்

- புவியின் உள்ளமைப்பைப் பயிலுவார்
- புவியின் கட்டமைப்பையும் இயக்கத்தன்மையையும் பயிலுவார்
- புவியின் பிரதான பௌதிகப் பண்புகளை பயிலுவார்
- இலங்கையின் பௌதிகப் பண்புகளை பயிலுவார்.
- உலகின் பிரதான விவசாய நிலப்பயன்பாட்டு வகைகளை பரிசீலிப்பார்
- இலங்கையின் பிரதான விவசாய நிலைப்பயன்பாட்டு வகைகளை பரிசீலிப்பார்
- உலகின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில உற்பத்திக் கைத்தொழில் வகைகளின் பிரதான பண்புகளை பரிசீலிப்பார்
- இலங்கையின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில உற்பத்திக் கைத்தொழில் வகைகளின் பிரதான பண்புகளை பரிசீலிப்பார்
- ஒரு விவசாய நாட்டின் பொருளாதாரத்துடன் ஒரு கைத்தொழிலாக்கம் பெற்ற நாட்டின் பொருளாதாரத்தை ஒப்பிடுவார்
- உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஆதிவாசிகள் எவ்வாறு தமது சுற்றாடலுடன் ஒற்றுமையாக வாழ்கின்றனர் என்பதைப் பரிசீலிப்பார்
- இலங்கையின் ஆதிவாசிகள் எவ்வாறு தமது சுற்றாடலுடன் ஒற்றுமையாக வாழ்கின்றனர் என்பதைப் பரிசீலிப்பார்
- ஒரு படத்தின் அடிப்படை மூலகங்களைப் பயிலுவார்
- படத்தில் புவியியல் அம்சங்களையும் அமைவிடங்களையும் குறிக்கும் திறன்களைப் பெறுவார்

## 3.0 பாடசாலையின் கொள்கையும் வேலைத்திட்டங்களும்

பாடத்திட்டத்தில் அடங்கியுள்ள பாட விடயங்களை மேலும் வெற்றிகரமான கற்றல் அனுபவங்களாக்குவதற்காக மாணவ மாணவியர் ஒவ்வொருவரும் பங்கு கொள்ளத்தக்க வேலைத்திட்டங்களைத் திட்டமிட்டு உருவாக்குதல் பாடசாலை நிருவாகத்தினரின் பொறுப்பாகக் கருதப்படுகின்றது. அவ்வாறான வேலைத்திட்டங்களில் அடங்கத்தக்க சில பாட இணைச் செயற்பாடுகள் இங்கு தரப்பட்டுள்ளன.

- புவியியல் சங்கம் தாபித்தல் : புவியியல் சங்கத்தின் ஊடாக, வினா விடை நிகழ்ச்சிகள், விவாதங்கள், கண்காட்சிகள், சுவரேடுகள், பருவகால சஞ்சிகைகள் போன்றவற்றை நடத்தலாம். இப்பணிகளில் மாணவரை வழிப்படுத்தல் பயன்மிக்கதாகும்.
- களச் செயற்பாடுகள், களப் பிரயாணங்கள், கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்து நடத்தல்
- தனியாட்களைக் கொண்டு சிற்றளவிலான ஆராய்ச்சிச் செயற்றிட்டங்களை ஆரம்பித்தல், செயற்றிட்ட அறிக்கைகளைத் தயாரிக்க வாய்ப்பளித்தல்
- பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ள வேறு சுற்றாடல் அமைப்புக்களுடன் கூட்டாகச் செயற்படுமாறு மாணவரைத் தூண்டுவதால் தமது புவியியல் அறிவை விருத்திப்படுத்திக் கொள்ள உதவுதல்
- படத்தில் புவியியல் அம்சங்களையும் அமைவிடங்களையும் குறிக்கும் திறன்களைப் பெறுவார்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 4.0 புவியியற் பாட கற்றல், கற்பித்தல் முறைகளும் பாடவேளைகளும்

புவியியல் பாடம் உயிரோட்டமானது, மாணவரை உயிரோட்டமாகச் செயற்படுவோராக்கத்தக்க வகையிலும் அவர்களது மனப்பாங்குகளை உடன்பாடானவாறாக விருத்தி செய்யத்தக்க வகையிலும் போட்டிக்குப் பதிலாக கூட்டு முயற்சியைப் பயிற்றத்தக்க வகையிலும் மேலும் கவர்ச்சிகரமான கற்றல் சூழலை உருவாக்கி அதனூடாக தேர்ச்சி விருத்திக்கு வழிகோலுதல் வேண்டும். இதற்காக தொழினுட்ப மாற்றங்கள், சமூகத் தேவைகள் ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு வகுப்பறையில் கையாளத்தக்க கற்றல் முறைகளை பொருத்தமான வகையில் ஒழுங்கு செய்து கொள்ளல் வேண்டும். அவ்வாறான சில கற்றல் கற்பித்தல் முறைகள் இங்கு காட்டப்பட்டுள்ளன.

### 4.1 களச் செயற்பாடுகள்

புவியியற் பாடத்தில் அடங்கும் பெரும்பாலான எண்ணக்கருக்களை வெளிக்களத்தில் மேற் கொள்ளத்தக்க களச் செயற்பாடுகளின் ஊடாக எளிதாக முன்வைக்கலாம். நன்கு ஒழுங்க மைக்கப்பட்டு, பூரண முன்னாயத்தத்துடனும் பொறுமையுடனும் கூட்டாகவும் மேற்கொள்ளப் படும் களச் செயற்பாடுகளின் ஊடாக பல நற்பயன்களைப் பெறலாம். இவ்வாறான களச் செயற்பாடுகளை ஒழுங்கு செய்து நடாத்தத்தக்க பல சந்தர்ப்பங்கள் உள்ளன.

#### (அ) அயற் சூழலைப் பயன்படுத்தல்

மாணவரின் அயற்சூழலைத் துணையாகக் கொண்டு களச் செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதன் மூலம், அவதானிப்பு, ஆராய்வு, தரவு சேகரிப்பு போன்ற கற்றல் உத்திகளை எளிதாகப் பயன்படுத்த வகை செய்யலாம். மாணவர்கள் பாடசாலையில் இருந்து அல்லது தமது வீட்டில் இருந்து அதிக தொலைவுக்குச் செல்லாத அயற்சூழலை விளங்கிக் கொள்வ தற்கும், அயற் சூழலில் பல்வேறு செயல்களில் ஈடுபடும் பற்றிய நேரடி அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் இது வழிகோலும்.

#### (ஆ) சூழலைப் படமாக்கல்

சூழலின் தரைத்தோற்ற இயல்புகளைப் படமாக்குவதனூடாக அடிப்படையான புவியியல் எண்ணக்கருக்களை எளிமையாக விளங்கிக் கொள்ளலாம். செயன்முறைப் புவியியல் தொடர்பாக மாணவர் ஏற்கனவே பெற்றுள்ள திறன்களை மேலும் விருத்தி செய்வதற்கு இது பெரிதும் துணையாக அமையும். படங்களை வரையும் போது, திசை, அளவுத்திட்டம், குறியீடுகள் ஆகியன பற்றிய விளக்கத்தை வழங்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 4.2 கல்விச் சுற்றுலாக்கள்

முன்னாயத்தத்துடன் பாடத்திட்டத்தின் குறித்த சில தலைப்புக்கள் சார்ந்த அறிவையும் விளக்கத்தையும் எளிதாகப் பெறுவதற்குக் கல்விச் சுற்றுலாக்கள் பெரிதும் பயனுடையதாகும். மாணவர்கள் தாமாகவே கூட்டாக, குறிக்கோள்களை இனங்கண்டு முன்னாயத்தங்களைச் செய்து கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்துகொள்வது பயனுடையதாகும். இதனூடாக அடிப்படை எண்ணக்கருக்களை எளிதாக விளங்கிக் கொள்வதற்குக் கல்விச் சுற்றுலாக்கள் வழிகோலும்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 4.3 அறிக்கை தயாரித்தல்

"பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி, வெளிக்களத்தில் சேகரித்த தரவுகளை அடிப்படை யாகக் கொண்டு, அறிக்கை தயாரித்தலும் அறிக்கைகளை வகுப்பறையில் முன்வைத்துக் கலந்துரையாடலும் கலந்துரையாடிய பின் அறிக்கையை மேலும் விருத்தி செய்தலும்" மற்றுமொரு கற்றல் முறையாகும். இதனை ஒரு குழுச் செயற்பாடாக மேற்கொள்வதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளிப்பதன் மூலம், மாணவரிடத்தில் குழுவுணர்வைத் தூண்டி நன்மனப்பாங்கை விருத்தி செய்ய முடியும்.

## 4.4 சுவரேடு

பல தகவல்களை வெளியிடத்தக்க ஒரு சாதனமே சுவரேடாகும். சுவரேட்டில் வெளியிடத்தக்க சில தகவல்கள் வருமாறு :

- களச்செயற்பாடுகள், கல்விச் சுற்றுலாக்கள் போன்றவற்றின் போது சேகரித்த தகவல் களும் தரவுகளும்
- அயற்சூழல் தொடர்பான பல்வேறு அறிக்கைகள்
- உள்நாட்டு, பிராந்திய மற்றும் பூகோள ரீதியிலும் நிகழும் புவியியல் மாற்றங்கள், முக்கியத்துவமுடைய தகவல்கள், அறிக்கைகள், சித்திரங்கள், ஒளிப்படங்கள் (புகைப்படங்கள்)
- மாணவரது ஆக்கங்கள்

சுவரேடு தயாரிப்பைக் குழுச் செயற்பாடாக வழங்கலாம். இக்குழுச் செயற்பாட்டின் ஊடாகப் பல திறன்களையும் மனப்பாங்குகளையும் விருத்தி செய்யலாம்.

## 4.5 கண்காட்சிகள்

பாடசாலையில் கண்காட்சிகளை ஒழுங்கு செய்தலை சிறந்ததொரு கற்றல் முறையாகக் குறிப்பிடலாம். பாடசாலைக் கண்காட்சிகளில் உள்ளடக்கத்தக்க பல அம்சங்கள் உள்ளன.

- களத்தில் தேடிப்பெறப்பட்ட புவியியல் முக்கியத்துவமுடைய அம்சங்கள் (பல்வேறு உயிரினங்கள், தாவர வகைகள், பாறைத் துண்டுகள் போன்றவை)
- மாதிரியுருக்கள், சுவரேடுகள் வானிலைத் தரவுகளைச் சேகரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட பல்வேறு தேசப்படங்கள் போன்றவை.

## 4.6 களப்பதிவேடு தயாரித்தலும் பயன்படுத்தலும்

பாடசாலை அயற்சூழலிலும் இலங்கையிலும் நிகழும் புவியியல் முக்கியத்துவமுடைய பல்வேறு நிகழ்வுகள் தொடர்பான தகவல்களையும் படங்கள் - சித்திரங்களையும் சேகரிக்க வழிப்படுத்தல் மிகப் பொருத்தமானது. இவ்வாறாகச் சேகரித்த தகவல்கள் மாணவரது அறிவு விருத்திக்கும் ஆக்கத்திறன் விருத்திக்கும் துணையாக அமையும்.

வகுப்பறையில் இடம்பெறும் கற்றல் - கற்பித்தற் செயன்முறையின் போது மேற்குறிப்பிட்ட கற்றல் முறைகளை பொருத்தமானவாறு மாற்றியமைத்து, தருணத்திற்கேற்ற வகையில் ஆசிரியர்கள் பயன்படுத்தலாம்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## உத்தேச பாடவேளைகள்

### 10 ஆந் தரம்

| பாட அலகு | பாடவேளைகள் |
|---|---|
| 10.1 | 05 |
| 10.2 | 07 |
| 10.3 | 05 |
| 10.4 | 05 |
| 10.5 | 07 |
| 10.6 | 10 |
| 10.7 | 07 |
| 10.8 | 08 |
| 10.9 | 10 |
| 10.10 | 05 |
| 10.11 | 05 |
| 10.12 | 08 |
| 10.13 | 08 |
| **மொத்தம்** | **90** |

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 5.0 கணிப்பீடும் மதிப்பீடும்

இப்பாடத்திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கு புவியியலின் அடிப்படை எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வதற்கும் அவற்றை தமது செயற்பாடுகளில் பிரயோகிக்கும் திறன்களை விருத்தி செய்வதற்கும் தேவையான ஆற்றல்களை வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்களின் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்காக தனியாள் செயற்பாட்டு, குழுச் செயற்பாட்டு முறைகள் சிபாரிசு செய்யப்படுகின்றது. அவ்வாறான செயற்பாடுகள் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுச் செயன்முறைகளிலும் உள்ளடக்கப்படலாம். அத்துடன் மாகாண, வலய மட்டங்களில் நடத்தப்படும் தவணை இறுதி, ஆண்டிறுதி எழுத்துப்பரீட்சைகளுக்கு மாணவர்கள் தோற்றப்பட வேண்டும் எனவும் சிபாரிசு செய்யப்படுகின்றது.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரப் பரீட்சைக்கற்கைநெறியின் இறுதியில், பரீட்சைத் திணைக்களத்தினால் பின்வருமாறு ஒழுங்கு செய்யப்படும்.

வினாப்பத்திரங்கள் 2

வினாப்பத்திரம் 1 - காலம் 1 மணித்தியாலயம்

சிறு 40 வினாக்களைக் கொண்ட புறவய வினாப்பத்திரமாகும். சுருக்கமான விடைகள் எதிர்பார்க்கப்படும். சரியான ஒரு விடைக்கு 2 புள்ளி வீதம் 40 வினாக்களுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்.

வினாப்பத்திரம் 2 - காலம் 3 மணித்தியாலயங்கள்

கட்டமைப்பு வினாக்கள், குறை கட்டமைப்புக் கட்டுரை வினாக்கள், தேசப்படவேலை ஆகியவற்றை உள்ளடக்கியது.

பகுதி I - செயன்முறைப் புவியியல்

பாடத்திட்டத்தின் 10.12,11.11,11.12,11.13,11.14 ஆகிய அலகுகள் அடங்கும் வகையில் வினா தயாரிக்கப்படும். 30 புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி II

10.1,10.2,10.3,10.5,10.7,10.9,10.10,10.13,11.1,11.3,11.5,11.7,11.9 ஆகிய அலகுகளின் விடய உள்ளடக்கம் அடங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட குறை கட்டமைப்பு வினாக்களுள் 5 இல் 3 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவிலும் 3 உப பகுதிகள் அடங்கியிருக்கும். அப்பகுதிகளுக்கு முறையே 3,4,8 புள்ளி வீதம் வழங்கப்படும். ஒரு வினாவுக்கு மொத்தப்புள்ளி 15 ஆகும். மூன்று வினாக்களுக்குமுரிய புள்ளிகள் 45 ஆகும்.

பகுதி III

10.4, 10.6, 10.8,10.11,11.2,11.4,11.6,11.8,11.10 அலகுகளின் விடய உள்ளடக்கம் அடங்கும் வகையில் தயாரிக்கப்படும். 5 வினாக்களுள் 2 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவும் 3 உப பகுதிகளைக் கொண்டதாகும். அப்பகுதிகளுக்கு முறையே 3,4,8 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். அதில் ஒரு வினாவுக்கு மொத்தப் புள்ளி 15 ஆகும். மூன்று வினாக்களுக்குமுறையே 45 ஆகும்.

வினாப்பத்திரம் - 1 80 புள்ளிகள்
வினாப்பத்திரம் - 2 120 புள்ளிகள் (பகுதி I -30, பகுதி II - 45, பகுதி III - 45)

மொத்தம் 200

இறுதிப்புள்ளி 200/2 = 100

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# 1.5 பாடத்திட்ட பொருளடக்கம்
# 10 ஆந் தரம்

**தேர்ச்சி** : பௌதீக, மானுடச் செயன்முறைகளின் இடைத்தொழிற்பாடுகள், பௌதீக, மானுடச் சூழலில் செலுத்தும் ஆதிக்கத்தை ஆராய்வார்

## தேர்ச்சி மட்டம்

- புவியின் உள்ளமைப்பைப் பயிலுவார்

## உள்ளடக்கம்

**10.1 புவியின் கட்டமைப்பு (5 பாடவேளைகள்)**

- வளிக்கோளம்
- நீர்க்கோளம்
- கற்கோளம்
- உயிர்க்கோளம்

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்

- ஜிக்ஸோ முறையின் கீழ் புவித் தொகுதி பற்றிய தகவல்களை முன்வைத்தல்
- புவியின் உள்ளமைப்பின் குறுக்கு வெட்டுமுகத் தோற்றத்தை அமைத்தல்
- நீர் வட்டத்தைக் காட்டுதல்
- புவித் தொகுதியில் ஏற்படும் மாற்றங்களில் மனித நடவடிக்கைகள் செல்வாக்குச் செலுத்தும் முறைகள் மற்றும் அவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகளை முன்வைத்தல்

## தரவிருத்தி உள்ளீடுகள்

- தேசப்படப் புத்தகம் (நிலவரை நூல்)
- தேசிய வரைபடப்புத்தகம்
- நூல்கள், சஞ்சிகைகள், செய்தித்தாள்கள்
- கல்வி நிகழ்ச்சிகள்
- உரிய தொலைக்காட்சி டிஸ்கவரி நிகழ்ச்சி, ஏனைய சுற்றாடற் கல்வி தொடர்பான நிகழ்ச்சிகள்
- நிறப் பென்சில்கள்
- வரைதல் தாள்கள்
- குறிப்புப் புத்தகம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி** : பௌதிக, மானுட தரைத்தோற்றத்தைக் கற்பதற்கும் பேணுவதற்கும் தேவையான உடன்பாடான மனப்பாங்குகளை வளர்த்துக் கொள்வார்

**தேர்ச்சி மட்டம்**

- புவியின் கட்டமைப்புப் பற்றியும் இயக்கத்தின் தன்மை பற்றியும் பயிலுவார்

**உள்ளடக்கம்**

**10.2 புவியின் கட்டமைப்பும் அதன் பண்புகளும்**

**(07 பாடவேளைகள்)**

- புவியோடு
- இடையோடு அல்லது மென்மூடி
- கோளவகம்
- பிரதான தகடுகள்
- தகட்டோட்டம்
    - நகர்வு
    - புவிநடுக்கங்கள்
    - எரிமைலைச் செயற்பாடு (தொழிற்பாடு)

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

- பிரதானப் புவித்தகடுகளை உலகப்படத்தில் குறித்துப் பெயரிடுதல்
- புவியின் உட்புற அமைப்பினை வரைபடம் மூலம் காட்டுதல்
- புவிநடுக்கம் மற்றும் எரிமலைச் செயற்பாடு நிகழும் பிரதேசப் பரம்பலை உலகப்படத்தில் குறித்தல்
- தகட்டோட்டம் தொடர்பான தகவல்களை சேகரித்தல் (சஞ்சிகைகள், செய்தித்தாள்கள்களின் ஊடாக)
- புவிநடுக்கம் மற்றும் எரிமலைச் செயற்பாடுகளின் காரணமாக நிகழும் சூழல் தாக்கங்களைப் பற்றிய தகவல் கோவையினைத் தயாரித்தல்

**தர விருத்தி உள்ளீடுகள்**

- தேசப்படப் புத்தகம் (நிலவரை நூல்)
- தேசிய வரைபடப்புத்தகம்
- உரிய நூல்கள், சஞ்சிகைகள், செய்தித்தாள்கள்
- கல்வி நிகழ்ச்சிகள்
- தொலைக்காட்சி டிஸ்கவரி நிகழ்ச்சி, ஏனைய சுற்றாடற் கல்வி தொடர்பான நிகழ்ச்சிகள்
- நிறப் பென்சில்கள்
- வரைதல் தாள்கள்
- குறிப்புப் புத்தகம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி** : பௌதிக, மானுட தரைத்தோற்றத்தைக் கற்பதற்கும் பேணுவதற்கும் தேவையான உடன்பாடான மனப்பாங்குகளை வளர்த்துக் கொள்வார்

## தேர்ச்சி மட்டம்

- புவியின் பிரதான பௌதிகப் பண்புகளைப் பயிலுவார்

## உள்ளடக்கம்

### 10.3 புவியின் பிரதான பௌதிகப் பண்புகள் (05 பாடவேளைகள்)

- நிலவுருவங்கள்
- கடல்களும் சமுத்திரங்களும்
- ஆறுகளும் குளங்களும்
- தாவர வகைகள்
- காலநிலை வகைகள்

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்

- பிரதான காலநிலை வகைகளை உலகப்படத்தில் குறித்துப் பெயரிடுதல்
- புவிமேற்பரப்பிலுள்ள நிலவுருவங்களை பௌதிக தேசப்படங்களினுடாக இனங்காணல்
- உலகின் பிரதான நிலவுருவ பண்புகள், காலநிலை வலயங்கள், பிரதான தாவர வகைகள் காலநிலைகளைக் காட்டும் தேசப்படங்களை ஊடு கட்டத்தற்தாள்களில் பிரதி செய்து அவற்றை ஒன்றின் மீது ஒன்றிணைத்து அவற்றுக்கு இடையிலான தொடர்புகளைப் பயிலுதல்
- உலகின் நதிகள், ஏரிகள், சமுத்திரங்கள், கடல்களை உலகப்படத்தில் குறித்துப் பெயரிடுதல்

## தர விருத்தி உள்ளீடுகள்

- உலகப்படப் புத்தகம் (நிலவரை நூல்)
- சுவர்த் தேசப்படம் (உலகம், இலங்கை)
- நில உருவங்களைக் காட்டும் படங்கள்
- நூல்கள், சஞ்சிகைகள்
- கல்வி நிகழ்ச்சிகள்
- தொலைக்காட்சி டிஸ்கவரி நிகழ்ச்சி, ஏனைய சுற்றாடற் கல்வி தொடர்பான நிகழ்ச்சிகள்
- நிறப் பென்சில்கள்
- வரைதல் தாள்கள்
- குறிப்புப் புத்தகம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி** : பௌதிக, மானுட தரைத்தோற்றத்தைக் கற்பதற்கும் பேணுவதற்கும் தேவையான உடன்பாடான மனப்பாங்குகளை வளர்த்துக் கொள்வார்

**தேர்ச்சி மட்டம்**

- இலங்கையின் பௌதிகப் பண்புகளைப் பயிலுவார்

**உள்ளடக்கம்**

**10.4 இலங்கையின் பௌதிகப் பண்புகள் (05 பாடவேளைகள்)**

- ஆட்புல எல்லைகள்
- தரைத்தோற்றம்
- காலநிலை வகைகள்
- இயற்கைத்தாவரம்

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

- இலங்கையின் தரைத்தோற்றம், காலநிலை, இயற்கைத் தாவரங்கள் பற்றிய சிற்றேடு தயாரித்தல்
- இலங்கையின் காலநிலை வலயங்களிற்கும் இயற்கைத் தாவரங்களிற்கும் இடையிலான இடைத் தொடர்பைப் பயிலுதல்
- இலங்கையின் தரைத்தோற்றங்களுள் தமது பிரதேசம் அடங்கும் தரைத்தோற்ற வலயத்தை இனங்கண்டு அதன் தெள்ளத்தெளிவான தரைத்தோற்ற இயல்புகள் பற்றிய தகவல்களை முன்வைத்தல்

**தர விருத்தி உள்ளீடுகள்**

- தேசப்படப் புத்தகம் (நிலவரை நூல்)
- தேசிய வரைப்படம் (உலகம், இலங்கை)
- இலங்கையின் ஆட்புலப் பிரதேச எல்லையைக் காட்டும் தேசப்படங்கள்
- இலங்கைத் தரைத்தோற்றத் தேசப்படங்கள்
- இலங்கை தாவர வகை வலயத் தேசப்படம்
- நூல்கள், சஞ்சிகைகள்
- கல்வி நிகழ்ச்சிகள்
- தொலைக்காட்சி டிஸ்கவரி நிகழ்ச்சி, ஏனைய சுற்றாடற் கல்வி தொடர்பான நிகழ்ச்சிகள்
- நிறப் பென்சில்கள்
- வரைதல் தாள்கள்
- குறிப்புப் புத்தகம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி** : பௌதிக, மானுட நிலவுருவை விளக்கமாகவும் பௌதீக மானுட புவியியலின் அடிப்படை எண்ணக்கருக்களையும் முறைமைகளையும் பயிலுவார்

**தேர்ச்சி மட்டம்**

- உலகின் பிரதான விவசாய நிலப்பயன்பாட்டு வகைகளைப் பரிசீலிப்பார்

**உள்ளடக்கம்**

**10.5 உலகின் பிரதான விவசாய நிலப்பயன்பாட்டு வகைகள் (07 பாடவேளைகள்)**

- பரந்த வர்த்தக வேளாண்மை
- செறிவான நுகர்வுப் பயிர்ச்செய்கை
- விலங்கு வேளாண்மை
- மத்தியதர விவசாயம்
- பெருந்தோட்ட பயிர்ச்செய்கை

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

- உலகின் பிரதான விவசாய நிலப்பயன்பாட்டு வகைகளைத் தேசப்படத்தில் குறித்துப் பெயரிடுதல்
- உலகில் விவசாயத்திற்கான காலநிலையும் தரைத்தோற்றமும்
- ஆதிக்கஞ் செலுத்துவதைக் காட்டும் தகவற் பிரசுரங்களைத் தயாரித்தல்
- பரந்த வர்த்தக வேளாண்மைக்கும் செறிவான பிழைப்பூதிய விவசாயத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் அட்டவணையொன்றில் காட்டுதல்

**தர விருத்தி உள்ளீடுகள்**

- உலகப்படம்
- தேசப்படப் புத்தகம் (நிலவரை நூல்)
- தேசிய வரைப்படப்புத்தகம்
- சுவர்த் தேசப்படங்கள் (உலகம், இலங்கை)
- தரைத்தோற்றத்தைக்காட்டும் படங்கள்
- நூல்கள், சஞ்சிகைகள்
- கல்வி நிகழ்ச்சிகள்
- தொலைக்காட்சி டிஸ்கவரி நிகழ்ச்சி, ஏனைய சுற்றாடற் கல்வி தொடர்பான நிகழ்ச்சிகள்
- நிறப் பென்சில்கள்
- வரைதல் தாள்கள்
- குறிப்புப் புத்தகம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி** : பௌதிக, மானுட நிலவுருவை விளக்கமாகவும், பௌதீக மானுட புவியியலின் அடிப்படை எண்ணக்கருக்களையும் முறைமைகளையும் பயிலுவார்

## தேர்ச்சி மட்டம்

- இலங்கையின் பிரதான விவசாய நிலப்பயன்பாட்டு வகைகளைப் பரிசீலிப்பார்

## உள்ளடக்கம்

## 10.6 இலங்கையின் பிரதான விவசாய நிலப்பயன்பாட்டு வகைகள்

**10 பாடவேளைகள்**

- இலங்கையின் பொருளாதாரத்தில் விவசாயத்துறையின் முக்கியத்துவம்
- பிழைப்பூதிய விவசாயம் (வாழ்வாதாரப் பயிர்ச்செய்கை)
- நெற் பயிர்ச்செய்கை
- சேனைப் பயிர்ச்செய்கை
- வர்த்தக வேளாண்மை
    - தேயிலை
    - றப்பர்
    - தென்னை
    - சிறு ஏற்றுமதிப்பயிர்கள்
- விலங்கு வேளாண்மை
    - மாடு
    - ஆடு
    - செம்மறி
    - கோழி
    - பன்றி
- மீன்பிடியும் மீன் வளர்ப்பும்
    - உண்ணாட்டு
    - கடல்

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்

- இலங்கையின் பொருளாதார முறைமையில் விவசாயத்தின் முக்கியத்துவத்தின் புதிய போக்குகளைக் காட்டும் தகவற் பிரசுரமொன்றைத் தயாரித்தல்
- "சேனைப் பயிர்ச்செய்கை, பொருத்தமான/ பொருத்தமற்ற நிலப் பயன்பாட்டு முறையாகும்" எனும் தலைப்பில் விவாதம் நடாத்துதல்
- பிரதான விவசாயப் பயிர்ப்பரம்பலைத் தேசப்படத்தில் குறித்துப் பெயரிடுதல்

## தர விருத்தி உள்ளீடுகள்

- தேசிய வரைப்படப்புத்தகம்
- சுவர்த் தேசப்படங்கள்
- நூல்கள், சஞ்சிகைகள்
- கல்வி நிகழ்ச்சிகள்
- தொலைக்காட்சி டிஸ்கவரி நிகழ்ச்சி, ஏனைய சுற்றாடற் கல்வி தொடர்பான நிகழ்ச்சிகள்
- நிறப் பென்சில்கள்
- வரைதல் தாள்கள்
- குறிப்புப் புத்தகம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி** : பௌதீக, மானுட நிலவுருவை விளக்கமாகவும், பௌதீக மானுட புவியியலின் அடிப்படை எண்ணக்கருக்களையும் முறைமைகளையும் பயிலுவார்

## தேர்ச்சி மட்டம்

- உலகின் தேர்ந்தெடுக்கப்பட்ட உற்பத்திக் கைத்தொழில்கள் சிலவற்றின் பிரதான பண்புகளை பரிசீலிப்பார்

## உள்ளடக்கம்

### 10.7 உலகின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில உற்பத்திக் கைத்தொழில்களின் பிரதான பண்புகள் 07 பாடவேளைகள்

- பருத்தி நெசவுக் கைத்தொழில்
- இருப்புருக்குக் கைத்தொழில்
- மோட்டார் வாகனக் கைத்தொழில்
- கப்பல் கட்டல் கைத்தொழில்
- மின், இலத்திரனியல் கைத்தொழில்
- விமானக் கட்டுமானக் கைத்தொழில்

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்

- உலகின் பிரதான உற்பத்திக் கைத்தொழில்களின் பரம்பலைத் தேசப்படங்களின் துணையுடன் இனங்காணல்
- வெவ்வேறு உற்பத்திக் கைத்தொழில்கள் இடப்படுத்தப்படுவதில் ஆதிக்கஞ் செலுத்திய பிரதான காரணிகளை விபரிப்பார்
- உலகில் உற்பத்திக் கைத்தொழில்களின் புதுப்போக்குகள், பிரச்சினைகள் பற்றிய அறிக்கைத் தயாரித்தல்

## தர விருத்தி உள்ளீடுகள்

- தேசிய வரைப்படப்புத்தகம்
- சுவர்த் தேசப்படங்கள்
- நூல்கள், சஞ்சிகைகள், புதினத்தாள்கள்
- கல்வி நிகழ்ச்சிகள்
- தொலைக்காட்சி டிஸ்கவரி நிகழ்ச்சி, ஏனைய சுற்றாடற் கல்வி தொடர்பான நிகழ்ச்சிகள்
- நிறப் பென்சில்கள்
- வரைதல் தாள்கள்
- குறிப்புப் புத்தகம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி** : பௌதீக, மானுட நிலவுருவை விளக்கமாகவும், பௌதீக மானுட புவியியலின் அடிப்படை எண்ணக்கருக்களையும் முறைமைகளையும் பயிலுவார்

## தேர்ச்சி மட்டம்

- இலங்கையின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கைத்தொழில்களின் பிரதான பண்புகளைப் பரிசீலிப்பார்.

## உள்ளடக்கம்

### 10.8 இலங்கையின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கைத்தொழில்களின் பண்புகள்

**08 பாடவேளைகள்**

- இலங்கைப் பொருளாதாரத்தில் கைத்தொழில்களின் முக்கியத்துவம்
- இலங்கையின் கைத்தொழில் வகைகள்
  - விவசாயம் சார்ந்த கைத்தொழில்கள்
  - சுரங்கங்களும் சுரங்கமகழ்தலும்
  - கனிப்பொருள் சார்ந்த கைத்தொழில்கள்
  - மின், இலத்திரனியல் கைத்தொழில்கள்
  - சேவைக் கைத்தொழில்கள்

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்

- இலங்கைக் கைத்தொழில்கள் இடப்படுத்தப்பட்டிருக்கும் விதத்தைத் தேசப்படத்தில் காட்டுதல்
- இலங்கையில் ஆடைக்கைத்தொழில் தொடர்பான தகவல்களைக் குழு நிலையில் சேகரித்து வகுப்பில் முன்வைத்தல்

## தர விருத்தி உள்ளீடுகள்

- தேசிய வரைப்படப்புத்தகம்
- நூல்கள், சஞ்சிகைகள், புதினத்தாள்கள்
- கல்வி நிகழ்ச்சிகள்
- தொலைக்காட்சி டிஸ்கவரி நிகழ்ச்சி, ஏனைய சுற்றாடற் கல்வி தொடர்பான நிகழ்ச்சிகள்
- நிறப் பென்சில்கள்
- வரைதல் தாள்கள்
- குறிப்புப் புத்தகம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி** : பௌதீக, மானுட நிலவுருவை விளக்கமாகவும், பௌதீக மானுட புவியியலின் அடிப்படை எண்ணக்கருக்களையும் முறைமைகளையும் பயிலுவார்

## தேர்ச்சி மட்டம்

- ஒரு விவசாய நாட்டின் பொருளாதாரத்துடன் கைத்தொழிலாக்கம் பெற்ற ஒரு நாட்டின் பொருளாதாரத்தை ஒப்பிடுவார்

## உள்ளடக்கம்

### 10.9 ஒரு விவசாய நாட்டினது பொருளாதாரத்துடன் கைத்தொழில் நாட்டினது பொருளாதாரத்தினை ஒப்பிடல் 10 பாடவேளைகள்

பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆஜன்டீனா (விவசாய நாடு), ஜேர்மனி (கைத்தொழில் நாடு) ஆகியவற்றையும் இந்தியா (விவசாய நாடு), ஜப்பான் (கைத்தொழில் நாடு) ஆகியவற்றையும் ஒப்பிட்டு நோக்குதல்

- வள அடிப்படை
- மொத்த சுதேச உற்பத்திக்கான பங்களிப்பு
- தொழிற்படையின் சதவீதம்
- ஏற்றுமதி வர்த்தகத்தில் பங்களிப்பு
- தொழிநுட்பம்
- பிரச்சினைகளும் எதிர்கால வாய்ப்புக்களும்

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்

- விவசாய நாட்டின் பொருளாதாரத்தின் தெள்ளத்தெளிவான பண்புகளையும் கைத்தொழில் நாட்டின் பொருளாதாரத்தின் தெள்ளத்தெளிவான பண்புகளையும் உள்ளடக்கிய அறிக்கைகள் தயாரித்து உரையாடல் நடாத்தல்

## தர விருத்தி உள்ளீடுகள்

- தேசிய வரைப்படப்புத்தகம்
- சுவர்த் தேசப்படங்கள்
- நூல்கள், சஞ்சிகைகள், புதினத்தாள்கள்
- கல்வி நிகழ்ச்சிகள்
- தொலைக்காட்சி டிஸ்கவரி நிகழ்ச்சி, ஏனைய சுற்றாடற் கல்வி தொடர்பான நிகழ்ச்சிகள்
- நிறப் பென்சில்கள்
- வரைதல் தாள்கள்
- குறிப்புப் புத்தகம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி** : இயற்கைச் சமூகத்திற்கிடையில் இணக்கமான இடைத்தொடர்புகளை விருத்தி செய்வதற்காக, புவி பற்றியும் அதில் வாழ்வோர் பற்றியும் விழிப்புடன் இருப்பதன் முக்கியத்துவத்தை நுணுகியாராய்வார்

**தேர்ச்சி மட்டம்**

- உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஆதிவாசிகள் எவ்வாறு தமது சுற்றாடலுடன் இணங்கி வாழ்கின்றனர் என்பதை பரிசீலிப்பார்

**உள்ளடக்கம்**

**10.10 உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஆதிவாசிகள் தமது சுற்றாடலுடன் இணங்கி வாழும் விதம் 05 பாடவேளைகள்**

- பரம்பல்
- சூழலுடனான இயைவு
- அறைகூவல்

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

- உலகில் சுதேசிகள் பரம்பி வாழும் பிரதேசங்களைத் தேசப்படத்தில் குறிப்பார்
- உலகின் சுதேசிகள் குறித்த தகவல்களை உள்ளடக்கிய சுவரேடொன்றைத் தயாரித்தல்

**தர விருத்தி உள்ளீடுகள்**

- மாதிப்பூகோளம்
- உலக தேசப்படப் புத்தகம் (நிலவரை நூல்)
- நூல்கள், சஞ்சிகைகள், புதினத்தாள்கள்
- வீடியோ (ஒளிநாடா) நாடாக்கள்
- இறுவட்டுக்கள் (CD)

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி** : இயற்கைச் சமூகத்திற்கிடையில் இணக்கமான இடைத்தொடர்புகளை விருத்தி செய்வதற்காக, புவி பற்றியும் அதில் வாழ்வோர் பற்றியும் விழிப்புடன் இருப்பதன் முக்கியத்துவத்தை நுணுகியாராய்வார்

**தேர்ச்சி மட்டம்**

- இலங்கையின் ஆதிவாசிகளை தமது சுற்றாடலின் மாற்றங்களுக்கு இசைவடையும் விததததைக் கற்பார்

**உள்ளடக்கம்**

**10.11 இலங்கையில் வாழும் ஆதிவாசிகள் தமது சுற்றாடல் மாற்றங்களுக்கு இசைவடையும் விதம் 05 பாடவேளைகள்**

- பரம்பல்
- சூழலுடனான இசைவு
- அறைகூவல்கள்

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

- இலங்கையின் பூர்வீக குடிகளின் வாழக்கைப் பாணியை அவுஸ்திரேலிய ஆதிவாசிகளின் வாழ்க்கைப் பாணியுடன் ஒப்பிட்டு அட்டவணைப்படுத்தல்

**தர விருத்தி உள்ளீடுகள்**

- தேசிய வரைப்படப்புத்தகம்
- சுவர்த் தேசப்படங்கள்
- நூல்கள், சஞ்சிகைகள், புதினத்தாள்கள்
- கல்வி நிகழ்ச்சிகள்
- தொலைக்காட்சி டிஸ்கவரி நிகழ்ச்சிகள், ஏனைய சுற்றாடற் கல்வி தொடர்பான நிகழ்ச்சிகள்
- நிறப்பென்சில்கள்
- வரைதல் தாள்கள்
- குறிப்புப் புத்தகம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி** : தரவுகள், தகவல்களைப் பகுப்பாய்வதற்கும் பொருள்கோருவதற்கும் முன்வைப்பதற்கும் புவியியற் சட்டமுறைகளைப் பயன்படுத்துவார்

## தேர்ச்சி மட்டம்

- ஒரு தேசப்படத்தின் அடிப்படை மூலகங்களைப் பயிலுவார்

## உள்ளடக்கம்

## 10.12 ஒரு தேசப்படத்தின் அடிப்படை மூலகங்கள்

**08 பாடவேளைகள்**

- தலைப்பு
- அமைவிடம்
- அளவுத்திட்டம்
- திசை முகம்
- குறியீடுகள்
- எழுத்துக்கள்
- முகப்புக் குறிப்பு

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்

- 1:50000 தேசப்படத்தின் அடிப்படை மூலகங்களை உள்ளடக்கிய பருமட்டாக ஒரு திட்டப் படத்தை உருவாக்குதல்

## தர விருத்தி உள்ளீடுகள்

- மாதிரிப்பூகோளம்
- 1:50000 தரைத்தோற்றப்படம்
- இலங்கைப்படம்
- நிறப்பென்சில்கள்
- வரைதல் தாள்கள்
- குறிப்புப் புத்தகம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி** : இயற்கைச் சமூகத்திற்கிடையில் இணைக்கமான இடைத்தொடர்புகளை விருத்தி செய்வதற்காக, புவி பற்றியும் அதில் வாழ்வோர் பற்றியும் விழிப்புடன் இருப்பதன் முக்கியத்துவத்தை நுணுகியாராய்வார்

**தேர்ச்சி மட்டம்**

- புவியியல் அம்சங்களையும் அமைவிடங்களையும் தேசப்படத்தில் குறிக்கும் திறன்களைப் பெறுவார்.

**உள்ளடக்கம்**

**10.13 ஒரு படத்தில் புவியியல் அம்சங்களையும் குறிப்பான அமைவிடத்தையும் குறித்தல் 05 பாடவேளைகள்**

- இவ்வகுப்பில் கற்பிக்கப்பட்ட பௌதிக, பொருளாதார பண்பாட்டு இயல்புகளுடன் தொடர்பான தகவல்களை குறித்துப் பெயரிடல்

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

- உலகின் பௌதிக இயல்புகளுடன் தொடர்புடைய முக்கியமான இடங்களும் பிரதேசங்களும்
- உலகின் பொருளாதார நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பிரதேசங்களும் நாடுகளும்
- உலகின் பண்பாட்டு இயல்புகளுடன் தொடர்புடைய இடங்களும் பிரதேசங்களும்
- உலகின் தற்கால முக்கியத்துவமுடைய இடங்களையும் பிரதேசங்களையும் உலகப் படத்தில் குறித்தல்

**தர விருத்தி உள்ளீடுகள்**

- மாதிரிப்பூகோளம்
- 1:50000 தரைத்தோற்றப்படம்
- இலங்கைப்படம்
- நிறப்பென்சில்கள்
- வரைதல் தாள்கள்
- குறிப்புப் புத்தகம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.